

சேலம் மாநகர தி.மு.க. இளைஞரணி சார்பில் தெற்கு சட்டமன்றத் தொகுதியில் கலைஞர் நூலகம் அமைக்கப்பட்டதை மாவட்டக் கழகச் செயலாளர் இரா. இராஜேந்திரன் திறந்து வைத்தார். மாநகர அமைப்பாளர் கேபிள். எஸ்.சரவணன் தலைமை வகித்தார். மாவட்ட அமைப்பாளர் அருண் பிரசன்னா முன்னிலை வகித்தார். மற்றும் இளைஞரணி நிர்வாகிகள் பி.எஸ். சீனிவாசன், மு.இப்ராகிம், சிலம்பம், கோபி, எம்.வெங்கடேஷ், கிரிதரன், பெ.சிவராஜ், சுஹைல் ரஹ்மான், மாவட்ட நிர்வாகிகள் சுபாசு, கார்த்திகேயன், சி.ராஜேந்திரன், கே.டி.மணி, தாமரைக்கண்ணன், தொகுதி பொறுப்பாளர் பார். இளங்கோவன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.



தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கோடைக்கால வெப்பம் அதிகரித்துள்ள நிலையில் கரூர் மாவட்டக் கழகம் சார்பில் கரூர் பேருந்து நிலையம் ரவுண்டானா அருகில் தண்ணீர் பந்தலை மாவட்ட கழகச் செயலாளரும், மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சருமான வி.செந்தில் பாலாஜி திறந்து வைத்து குடிநீர், நீர்மோர், இளநீர், குளிர்பானம், வெள்ளரி, தர்பூசணிகளை பொது மக்களுக்கு வழங்கினார். வெங்கமேடு, தாந்தோன்றிமலையிலும் தண்ணீர் பந்தலை அமைச்சர் திறந்து வைத்தார். எம்.எல்.ஏ.க்கள் இரா.மாணிக்கம், பி.ஆர்.இளங்கோ அருகில் உள்ளனர்.

### டி. செங்குட்டுவன், இ.ஜி. சுகவனம் பங்கேற்பு!

# கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட இளைஞரணி சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம்!

## தே.மதியழகன் எம்.எல்.ஏ. - தமிழன் பிரசன்னா சிறப்புரை!

கிருஷ்ணகிரி, ஏப். 1-

தமிழ்நாட்டு பிள்ளைகள் கல்வி கற்க கூடாது தமிழ் சமூகம் உயரக்கூடாது என ஒன்றிய அரசு தமிழகத்தை வஞ்சிக்கிறது. அவர்களுடன் அ.தி.மு.க. பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர் இதுதான் அ.தி.மு.க., பா.ஜ.க. கள்ளக் கூட்டணி கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் காவேரி பட்டணத்தில் நடைபெற்ற இளைஞர் அணி பொதுக் கூட்டத்தில் கழக செய்தி தொடர்பு இணைச் செயலாளர் வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா பேசினார்.

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், மாவட்ட இளைஞரணி சார்பில் இந்தி திணிப்பு , நிதி பகிர்வில் பாரபட்சம், தொகுதி மறு சீரமைப்பில் அநீதி இழைத்த ஒன்றிய அரசைக் கண்டித்து மாபெரும் பொதுக்கூட்டம் காவேரிபட்டணத்தில் நடைபெற்றது.

மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தினேஷ்ராஜன் தலைமை தாங்கினார்.

மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் சங்கர் வரவேற்புரை ஆற்றினார், ஒன்றிய செயலாளர்கள் தேங்காய். சுப்பிரமணி, மகேந்திரன், கோவிந்தன், தனசேகரன், பேரூர் கழக பொறுப்பாளர் சாஜித், கிருஷ்ணகிரி நகர பொறுப்பாளர்கள் அஸ்லாம், வேல்மணி, பேரூராட்சித் தலைவர் அம்சவேணி செந்தில்குமார், பேரூராட்சி துணைத் தலைவர் மாலினி மாதையன், முன்னாள் ஒன்றிய குழு துணை தலைவர் சசிகலா தசரா, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் சத்தியமூர்த்தி, சரவணன், சங்கர், லயோலா ராஜசேகர் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர். கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ., மாநில இளைஞரணி துணைச் செயலாளர் சீனிவாசன், தலைமைக் கழக செய்தி தொடர்பு இணை செயலாளர் வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, இளம் பேச்சாளர் ஆனந்த் சைனி ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள்

கூட்டத்தில் கழக செய்தி தொடர்பு இணைச் செயலாளர் தமிழன் பிரசன்னா பேசும்போது இந்தியாவில் மொத்தம் 543 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். மக்கள் தொகை அடிப்படையில் ஒன்றிய அரசு தொகுதிகள் மறுபரிசீலனை செய்ய திட்டமிட்டு உள்ளது. தமிழ்நாடு, ஆந்திரா, தெலுங்கானா, கேரளா, கர்நாடகா போன்ற தென்மாநிலங்களில் பாஜகவால் வெற்றி பெற முடிவதில்லை. பா.ஜ.க.வால் நம்முடைய வாக்குகளை பெற முடிவதில்லை. இதனால் தென்னிந்தியாவில் 34 தொகுதிகளை குறைத்து விட்டு, வடஇந்தியாவில் உத்திரபிரதேசம், ராஜஸ்தான், பீகார் ஆகிய மாநிலங்களுக்கு 34 தொகுதிகளை கூடுதலாக வழங்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. பாராளுமன்றத்தில் 848 இருக்கைகள் போடப்பட்டுள்ளது. அதன்படி பிரித்தால் தமிழகத்திற்கு கூடுதலாக 10 தொகுதிகள் கிடைக்கும். தமிழகத்திற்கு 10 தொகுதிகள் அதிகரித்தால் உத்தரப்பிரதேச மாநிலத்திற்கு 63 தொகுதிகள், பீகாரர்க்கு 39 ராஜஸ்தான் 25 மத்திய பிரதேசத்திற்கு 23 என 120 சீட்டுகள் கூடுதலாக பா.ஜ.க. அதிகப்படுத்துகிறது. இதன் நோக்கம் தமிழ்நாட்டு மக்கள் படிப்பறிவு பெறக்கூடாது, கால் மீது கால் போட்டு அமரக்கூடாது, தமிழ்நாட்டு முன்னேறக்கூடாது என ஒன்றிய அரசு சட்டமாக்கி தமிழர்களை அடிமையாக மாற்ற முயற்சித்து வருகின்றனர்.

தி.மு.க. வினர் மீது ஒன்றிய அரசு அமலாக்கத்துறை, வருமானவரித்துறை, மூலம் பல்வேறு சோதனைகள் வழக்குகள் பதிவு செய்யப்பட்டது. ஆனால் தமிழக முதலமைச்சர் யார் காலிலும் விழவில்லை இன்றைக்கு அ.தி.மு.க.வினர் பா.ஜ.க. காலில் விழுந்து உள்ளனர். ஒன்றிய பா.ஜ.க. அரசு தமிழர்களுக்கு துரோகம் விளைவிக்கிறது. தமிழக பிள்ளைகள் படிப்பை கெடுக்கிறது புதிய கல்விக் கொள்கையின் படி மூன்றாவது படிக்கும் குழந்தை களுக்கும் தகுதி தேர்வு வைக்க வழிவகை செய்கிறது

தமிழ் சமூகம் உயரக்கூடாது என ஒன்றிய அரசு நினைக்கிறது அவர்களிடம் அ.தி.மு.க. அடிமை கும்பல் பேச்சுவார்த்தை நடத்தி வந்துள்ளனர். அ.தி.மு.க. வினர் கூட்டணி என்றால் நேராக செல்வார்கள். கூட்டணி இல்லை என்றால் தலை மீது துண்டை போட்டுக் கொண்டு கொள்ளை புறமாக செல்வார்கள் அதுதான் அ.தி.மு.க. பா.ஜ.க. கள்ளக் கூட்டணி. பா.ஜ.க. தமிழகத்தை வஞ்சிக்கிறது அவர்களை அதிமுக ஆதரிக்கிறது என பேசினார்.

கூட்டத்தில் மாநில அமைப்புசாரா ஓட்டுனர் அணி செயலாளர் டி. செங்குட்டுவன், மாநில சொத்து பாதுகாப்பு குழு உறுப்பினர் இ.ஜி சுகவனம், மாநில விவசாய அணி துணை செயலாளர் வெங்கடேசன், மாநில வர்த்தக அணி துணை செயலாளர் சீனிவாசன், மாநில தொமுச துணை செயலாளர் கிருஷ்ணன்,

மாவட்ட துணைச் செயலாளர் சாவித்திரி கடலரசு மூர்த்தி, பொருளாளர் கதிரவன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் கிருபாகரன் , செந்தில் பொதுக்குழு உறுப்பினர்கள் சித்ரா சந்திரசேகர், பாலன், நாகராசன், பேரூர் கழக செயலாளர் தம்பிதுரை, முன்னாள் பேரூர் கழக செயலாளர் பாபு, கழக பிரமுகர் அன்பரசன் உள்ளிட்ட மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், தலைவர்கள், துணைத்தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், கிளை கழக செயலாளர்கள், முன்னாள் இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், BLA ,BLC தோழர்கள், ஏராளமானோர் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மகேந்திரன் நன்றி உரை ஆற்றினார்.

# கரூரில் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் - கருத்தரங்கம்!

## அமைச்சர் வி.செந்தில்பாலாஜி துவக்கி வைத்தார்!

கரூர், ஏப். 1-

கரூரில் தனியார் துறை வேலை வாய்ப்பு முகாம், என் கல்லூரி கனவு கருத்தரங்கம் நிகழ்ச்சியை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி துவக்கி வைத்து பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி தலைமையில் கரூர் ஜெய்ராம் வித்யா பவன் மெட்ரிக் மேல் நிலைப் பள்ளி வளாகத்தில் இளைஞர்களுக்கான மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் நடைபெற்றது.

இம்முகாமில் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி பேசியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொழில் துறை வளர்ச்சி மேம்பாடு நோக்கோடு உலகத்தின் பல்வேறு நாடுகளுக்கும் சென்று பல்வேறு தொழில் முதலீடுகளை ஈர்த்து அதன் மூலம் லட்சக்கணக்கானோருக்கு வேலைவாய்ப்பினை பெற்று தந்துள்ளார்கள். படித்த இளைஞர்கள் மற்றும் மகளிர் முன்னேற பல்வேறு புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கி வருகிறார்கள். முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் பேரில் கடந்த 3 ஆண்டுகளில் பல்வேறு தனியார் துறை வேலை வாய்ப்பு முகாம்கள் மூலம் மாநில அளவில் 2.65 லட்சம் நபர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. அந்தவகையில் இன்றைய தினம் கரூர் மாவட்டத்திலுள்ள வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் பயன்பெறும் வகையில் மாவட்ட நிர்வாகம் மற்றும் மாவட்ட வேலை வாய்ப்பு & தொழில் நெறி வழிகாட்டும் மையம் இணைந்து

மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் நடைபெற்று வருகிறது. இதில் 141 முன்னணி வேலையளிக்கும் நிறுவனங்கள் கலந்து கொண்டார்கள். இதில் கலந்து கொண்ட 1832 நபர்களில் 263 நபர்களுக்கு முதல் கட்டமாக உடனடி பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் 196 நபர்க வேலையளிக்கும் நிறுவனங்கள் தேர்வு செய்து வைக்கப்பட்டுள்ளார்கள். ஆணை பெற்றவர்கள் இதோடு நின்றுவிடாமல் மேலும் வெற்றியடைய வேண்டுமாய் கேட்டுக் கொள்வதாக அமைச்சர் பேசினார்.

இதனைத் தொடர்ந்து, வருவாய்த் துறையின் சார்பாக 10 பயனாளிகளுக்கு 5 பட்டாக்களும், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் சார்பாக சத்திய வாணி முத்து அம்மையார் இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தின் கீழ் 10 பயனாளிகளுக்கு ரூ.49450 மதிப்பீட்டில் தையல் இயந்திரங்களும். மகளிர் திட்டத்தின் மூலம் 43 மகளிர் சுய உதவிக் குழுக்களை சேர்ந்த 520 உறுப்பினர்களுக்கு ரூ.4.51 கோடி மதிப்பீட்டில் வங்கிக் கடனுதவிகளும். மதுவிலக்கு துறை சார்பில் மறுவாழ்வு நிதி நலத்திட்டத்தின் கீழ் 09 பயனாளிகளுக்கு ரூ.4.50 இலட்சம் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளும் என மொத்தம் 549 பயனாளிகளுக்கு ரூ.4.55 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை அமைச்சர் வழங்கினார்.

**என் கல்லூரி கனவு வழிகாட்டல் நிகழ்ச்சி!**

முன்னதாக கரூர் அரசு மருத்துவக் கல்லூரி கலையரங்கில், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பாக 12 ஆம் வகுப்பு முடித்த ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ, மாணவியர்களுக்கு அடுத்து என்ன படிக்கலாம் மேல்நிலைப் பள்ளிகளில் படித்து தேர்ச்சி பெற்ற மாணவ, மாணவியர்கள் தங்களின் எதிர்கால கனவினை நனவாக்கும் வகையில் உயர்கல்விக்கான வாய்ப்புகள் பற்றிய பிரிவு வாரியான பட்டம், பட்டயப் படிப்புகள், கல்லூரிகளை எவ்வாறு தேர்ந்தெடுப்பது, மேற்படிப்பினை முடித்தவுடன் கிடைக்கும் வேலைவாய்ப்புகள், போட்டித் தேர்வுகள் மற்றும் தொழில் வழிகாட்டல் ஊக்கப்படுத்துதல், வங்கிக்கடன் மற்றும் உதவித்தொகை பெறுதல் குறித்து தலைசிறந்த வல்லுநர்கள் மற்றும் கல்வியாளர்களைக் கொண்டு வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டது.

கரூர் மாவட்டத்தில் உள்ள 55 அரசு பள்ளிகளில் இருந்து 700 க்கும் மேற்பட்ட மாணாக்கர்கள் பங்கேற்றனர். இந்நிகழ்ச்சியில்

மாணாக்கர்களின் கனவை நனவாக்கும் படிப்புகள், உயர்கல்விக்குச் செல்ல ஏராளமான உதவித்தொகை தொடர்பான “என் கல்லூரி கனவு” வழிகாட்டி நிகழ்ச்சியை மின்சாரம், மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி தொடங்கி வைத்து பேசினார்.

இம்முகாமில் மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல். சட்டமன்ற உறுப்பினர்கள் இரா.மாணிக்கம் (குளித்தலை), ஆர்.இளங்கோ(அரவக்குறிச்சி), துணை மேயர் தாரணி சரவணன், உதவி இயக்குநர் மாவட்ட வேலை வாய்ப்பு ராதிகா, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் ஜோதி, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் சுகானந்தம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அலுவலர் சக்திபாலகங்காதரன், ஜெய்ராம் கல்வி அறக்கட்டளை தலைவர் ராமசாமி, மண்டலக்குழு தலைவர்கள் கனகராஜ், கோல்ட்ஸ்பாட் ராஜா, சக்திவேல், அன்பரசு மற்றும் அரசு அலுவலர்கள் மற்றும் வேலைநாடுநர்கள் கலந்து கொண்டனர்.

### வேப்பந்தட்டை மேற்கு ஒன்றிய கழக செயலாளர்

# செ.நல்லதம்பி தந்தை செல்லப்பிள்ளை மறைவு!

## மாவட்டப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் - எம். பிரபாகரன் எம்.எல்.ஏ. அஞ்சலி!

பெரம்பலூர், ஏப். 1 -

பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் செ.நல்லதம்பியின் தந்தை செல்லப்பிள்ளை என்பவர் உடல் நலக்குறைவால் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

கிருஷ்ணாபுரம் கிராமத்தில் அவரது இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த செல்லப்பிள்ளை அவர்களை உடலுக்கு, மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன் ஆகியோர் அஞ்சலி செலுத்தினார்கள். இதில் மாநில நிர்வாகிகள் பா.துரைசாமி, குன்னம் சி.இராஜேந்தி ரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் செ.அண்ணாதுரை, ஆர்.முருகேசன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் என்.கிருஷ்ணமூர்த்தி, எம்.ராஜ்குமார், தி.மதியழகன், சி.ராஜேந்திரன்,

ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் டாக்டர் செ. வல்லபன், ந.ஜெகதீஷ்வரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஆதவன் (எ) ஹரிபாஸ்கர், துணை அமைப்பாளர்கள் டி.ஆர்.சிவசங்கர், அ. அப்துல்கரீம், வ.சுப்ரமணியன், ஆர்.அருண், மா.பிரபாகரன், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தங்க.கமல் உள்ளிட்டோர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினார்கள்.



100 நாள் வேலை உறுதி திட்டத்தில் (MGNREGA) மூலம் தமிழ்நாட்டிற்குத் தர வேண்டிய ரூ.4034 கோடி நிதியை வழங்காமல் தமிழ்நாட்டை தொடர்ச்சியாக வஞ்சித்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து தலைமைக் கழகத்தால் அறிவிக்கப்பட்ட கண்டன ஆர்ப்பாட்டம் புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் அன்னவாசல் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் பரம்பூரில் ஒன்றிய செயலாளர் கே.எஸ்.சந்திரன் தலைமையிலும், கழக விவசாய அணி துணைச் செயலாளர் கே.ஆர்.என்.போஸ், அன்னவாசல் பேரூர் கழக செயலாளர் எம்.எஸ்.ஏ.முகம்மது ரிஷா முன்னிலையிலும் நடைபெற்றது. டாக்டர் கே.என்.அமானுல்லா, இ.பி.சண்முகம், வழக்கறிஞர் உஷாராணி , ஏ.சுந்தர்ராஜ், டி.ஜே. அண்ணாத்துரை, சாங்கிராப்பட்டி ரவி, ரெங்கசாமி, முகம்மது அலி ஜின்னா, சிவசுப்பிரமணியன், கிட்டு, கணேசன், முத்துக்குமார், மதியழகன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### த. மாசிலாமணி

**ஏப்ரல் 1 (2021)**



**தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் பேச்சுகளால் ஈர்க்கப்பட்டு, இளமைப் பருவம் முதலே கழகப் பணியாற்ற தொடங்கியவர்.**

**தலைமைக் கழகப் பேச்சாளராகவும், மாநில தொண்டர் அணிச் செயலாளராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இவர் படித்தபோது, விபரீதமான – விரும்பத்தகாத – வேண்டாத ஒரு நிலைமை உருவாக்கப்பட்டு, அதன் விளைவாக ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு சிறைவாசம் அனுபவித்தவர்.**

**1982ல் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், இவரது மணவிழாவினை நடத்தி வைத்தபோது “புரட்சிக் கவிஞர் வரிகளுக்கேற்ப சிறுத்தைக் கூட்டத்தில் உள்ள ஒரு சிறுத்தைதான் தம்பி மாசிலாமணி’’ என்று பாராட்டினார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**